மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2025– ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06–ஆம் நாள் திங்கட்கிழமை
இடைக்கால மனுஎண்.5/2025 ல் அசல் வழக்கு எண்.55/2019

**CNR.No. TNTT-08-000039-2019**

1.சுயம்புகனி அம்மாள்
2.ஆறுமுகக்கனி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1.சக்திபிச்சை
2.செந்தூர்பாண்டி
3.வேல்செல்வி
4.பாலகிருஷ்ணன்
5.சிவகுமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெகநாதன் ஜெபராஜா அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையிலும், இருதரப்பு வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (06.10.2025) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

தாவா வழக்கினை விசாரணை பட்டியலிலிருந்து நீக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

அ) தாவா வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டுள்ளது. தாவா வழக்கின் வழக்குரை சொத்து விபரத்தில் பழைய சர்வே எண்: 85/54ன் மொத்த விஸ்தீரணம் 28 செண்டில் ஒரு பகுதியில் 8 செண்டில் தாவா 1ம் தபசில் சொத்து


HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.06 20:28:21 +0530

உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி புல எண்: 85/54 என்பது தற்போது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஆ) அதில் குறிப்பிட்ட சில உட்பிரிவுகளில் தாவா 1ம் தபசில் சொத்து வருகிறது என்ற விபரம் தெரிவித்து தாவா வழக்கில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட ஆணையர் 08.07.2025 ல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதில், தாவா 1ம் தபசில் சொத்து இருக்கும் புல எண்: 85/54 தற்போது புல எண்: 85/54A முதல் 85/54E வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் தாவா 1ம் தபசிலாக காண்பிக்கப்பட்டிருக்கும் 8 செண்டு நிலம் தற்போதைய உட்பிரிவின்படி 85/54D முழுவதிலும், புல எண்: 85/54A–ல் தென்பகுதியிலும் 85/54B–ல் தென்பகுதியிலும் 85/54E–ல் மேற்கு பகுதியிலும் மற்றும் 85/54C–ல் கீழ் பகுதியிலும் அமைந்துள்ளதாகவும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

இ) ஆணையர் வரைபடத்தில் உள் அளவுகள் குறிப்பிடப்படவில்லை. ஆணையர் வரைபடத்தில் ஆணையர் கொடுத்துள்ள அளவுகள் உட்பிரிவுடன் கணக்கிட்டால் தாவா சொத்தின் பரப்பளவு சரியாக வரவில்லை. தற்போது மனுதாரர்கள் நியமனம் செய்துள்ள வழக்கறிஞர் மூலம் வழக்கு விசாரணைக்கு ஆயத்தம் செய்த போது தான் மனுதாரர்களுக்கு மேற்படி விபரம் தெரிய வந்துள்ளது. மனுதாரர்கள் இம்மனுவுடன் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனைகள் மற்றும் ஆணையர் வாரண்டை Re–issue செய்ய மனு தாக்கல் செய்துள்ளனர். எனவே, தாவா வழக்கினை விசாரணை பட்டியலிலிருந்து நீக்கி உத்தரவிட வேண்டும்.

<u>3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை குறிப்பாணை:</u>

அ) மனு சங்கதிகள் வரிவரியாக குறிப்பபிடப்பட்டு மறுக்கப்பட்டுள்ளன. 1ம் தபசில் சொத்து புல எண்.85/54 ல் செண்ட் 28 ல் மேல்புறம் செண்ட் 16 ல் தென்புற செண்ட் 8 என்று தெளிவாக வழக்கு தாக்கல் செய்யும் போது கூறிவிட்டு தற்போது பொத்தம் பொதுவாக கூறுவது ஏற்புடையதல்ல. 2ம் தபசில் சொத்து புல எண்.85/54 ல் செண்ட் 28 ல் மேல்புறம் செண்ட் 16 ல் தென்புறம் செண்ட் 8 ல் தென்கீழ் பகுதியில் செண்ட் 4 என்று விளம்புகைப் பரிகாரம் கோரிவிட்டு தற்போது 1ம் தபசில் சொத்தினைப் பொறுத்து பரிகாரம் கேட்பதற்கு சமமாக அசல்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.06 20:28:26 +0530

வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

ஆ) வழக்கானது மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக விசாரணைக்கு போடப்பட்டிருக்கும் சமயத்தில் எவ்வித நியாயமான காரணமும் இன்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கையில் புல எண்.85/54D 1.60 ஏர்ஸ்(4 செண்ட்) உள்ள AEFG பகுதி அரிராமன் பெயரில் இருப்பதாக ஆணையர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஆணையர் அறிக்கையை கொண்டு வழி நடத்தலாமே தவிர சாட்சியம் திரட்டக் கூடாது என்பது பொது விதியாகும். முந்தைய ஆணையர் மனு முடிய 5 ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை</u>

தாவா வழக்கினை விசாரணை பட்டியலிலிருந்து நீக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

<u>தீர்வு</u>

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கு எண்.55/2019ன் வாதிகள். எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவர். தாவா வழக்கானது 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியான 2ம் தபசில் சொத்து வாதிகள் மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக் கோரியும், 2ம் தபசில் சொத்தினை 1ம் பிரதிவாதியிடமிருந்து சுவாதீன மீட்பு செய்யக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட பிறகு இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் விசாரணை பட்டியலில் இருந்து தாவா வழக்கினை நீக்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. நீதிமன்ற ஆணையருக்கு மீண்டும் வாரண்ட் வழங்கி தாவா சொத்துக்களை நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.06 20:28:32 +0530

செய்யக் கோரி இம்மனுவுடன் தாக்கல் செய்திருந்த இடைநிலை மனு எண்.7/2025 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எந்த காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதோ அம்மனுவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், 5 ஆண்டுகளுக்கும் மேலான தாவா வழக்கினை விசாரணை பட்டியலில் இருந்து நீக்கரவு செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத் தக்கதல்ல.

**7. முடிவாக,**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 06.10.2025 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.06 20:28:37 +0530